## பாடம் - 7 الدرس السابع

## துயர ஆண்டு عام الحزن

நபிகள் நாயகத்தின் பெரிய தந்தை அபூதாலிபின் உடலின் பல பகுதிகளிலும் நோய் பரவியது. படுக்கையிலேயே அவர் முடங்கிவிட்டார். பின்னர் சிறிது நேரத்திற்குள் மரணவேளையை அவர் நெருங்கிவிட்டார். அப்போது நபி(ஸல்) அவர்கள் அவரின் தலைமாட்டில் இருந்தார்கள். அவர் மரணத்திற்கு முன்பு 'லாஇலாஹ இல்லல்லாஹ்' என்ற கலிமாவை மொழிந்துவிடுமாறு அபூதாலிபிடம் வேண்டிக் கொண்டிருந்தார்கள். ஆனால் அவருக்குப் பக்கத்திலிருந்த அவரது தீய நண்பர்கள்- அபூஜஹ்ல் அவர்களுக்குத் தலைமை வகித்திருந்தான்- அவரைத் தடுத்துக்கொண்டிருந்தார்கள். உம் தந்தையர் மற்றும் பாட்டன் மார்களின் மார்க்கத்தை விட்டுவிடப் போகிறீரா? அப்துல் முத்தலிபின் மார்க்கத்தை புறக்கணிக்கப் போகிறீரா? எனவும் கூறிக்கொண்டிருந்தார்கள். பிறகு அவர் இணைவைப்பிலேயே மரணமடைந்தார். இஸ்லாத்தை ஏற்காத நிலையிலேயே அவரை இறந்ததற்காக நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் துயரம் இருமடங்காக அதிகரித்தது. அபூதாலிப் மரணமடைந்து சுமார் இரண்டு மாதங்களில் கதீஜாவும் மரணமடைந்தார்.

### தாயிஃபில் நபிகள் நாயகம்

முஸ்லிம்களுக்கு குரைஷிகள் தொடர்ந்து துன்பம் கொடுத்துக் கொண்டும் அநீதி, அக்கிரமம் இழைத்துக் கொண்டும் வந்தனர். அதனால் தாயிஃப் செல்வது பற்றி சிந்திக்கலானார்கள். அங்குள்ள மக்களுக்கு அல்லாஹ் நேர்வழி காட்டக் கூடுமென யோசித்தார்கள். தாயிஃபுக்குப் பயணம் மேற்கொள்வது எளிதான காரியமல்ல. காரணம் தாயிஃபைச் சுற்றிலும் உயரமான மலைகள் இருந்ததால் பாதை கஷ்டமானதாக இருந்தது. நபியவர்கள் தாயிபுக்கு பயணமானார்கள்.

ஆயினும் தாயிஃப் மக்கள் நபிகள் நாயகம்(ஸல்) அவர்களை மிகவும் மோசமான முறையில் வரவேற்று அவர்களின் அழைப்பையும் நிராகரித்தனர். அவர்களின் பேச்சை செவியேற்காமல் அவர்களை விரட்டியடித்தனர். அவர்களுக்கு எதிராக சிறுவர்களைத் தூண்டிவிட்டனர். அவர்கள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைக் கல்லால் எறிந்து அவர்களின் இரு கணுக்கால்களில் இரத்தம் வரும் அளவுக்கு காயப்படுத்தினார்கள். அவர்கள் கவலையுற்றவர்களாக வந்த வழியே மக்காவை நோக்கித் திரும்பினார்கள்.

அப்போது நபியவர்களிடம் ஜிப்ரீல்(அலை) வந்தார். அவருடன் மலைகளுக்குப் பொருப்பாளரான மலக்கும் இருந்தார். நபியவர்களை ஜிப்ரீல் அழைத்து, 'நீங்கள் விரும்பியதை ஆணையிடுவதற்காக மலைகளுக்குரிய மலக்கை அல்லாஹ் உம்மிடம் அனுப்பிவைத்துள்ளான்' எனக் கூறினார். அப்போது மலைகளுக் குரியவானவர், 'முஹம்மதே! நீர் விரும்பினால் மக்காவைச் சூழ்ந்துள்ள இரு மலைகளை இவர்களின் மீது புறட்டிவிடுகிறேன்' என்றார். அகு நபிகள் நாயகம் (ஸல்), 'வேண்டாம்! அல்லாஹ்வுக்கு எதையும் இணைவைக்காமல் அவனை மட்டுமே வணங்கக்கூடிய சந்ததிகளை இவர்களிலிருந்து அல்லாஹ் தோற்றுவிப்பான் என நான் நம்புகிறேன்' எனக் கூறினார்கள்.

### சந்திரன் பிளந்த நிகழ்ச்சி

இணைவைப்பவர்கள் நபிகள் நாயகம்(ஸல்) அவர்களோடு தர்க்கம் செய்து வந்த விஷயங்களில் ஒன்று அற்புதங்களைக் காண்பிக்குமாறு நபியவர்களிடம் அவர்கள் வேண்டிக் கொண்டது. இக்கோரிக்கை பல முறை அவர்களிடமிருந்து வந்தது. ஒரு முறை சந்திரனை இரு கூறாகப் பிளந்து காட்டும்படி நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வேண்டினார்கள். அவ்வாறே நபியவர்கள் தம் இறைவனிடம் வேண்டிக் கொண்டு சந்திரனை இரு கூறாகப் பிளந்து காட்டி னார்கள். குறைஷிகள் அந்த அற்புதத்தை நீண்ட நேரம் கண்டார்கள். எனினும் அவர்கள் அதை நம்பவில்லை. 'முஹம்மத் எங்களுக்கு சூனியம் செய்துவிட்டார்' எனக் கூறினார்கள். அப்போது ஒரு மனிதர், 'இவர் உங்களுக்கு சூனியம் செய்து விட்டாலும் அனைத்து மக்களுக்கும் அவரால் சூனியம் செய்ய முடியாது. எனவே இதன் உண்மை நிலையை அறிந்து கொள்வதற்காக பயணக் கூட்டத்தினரை எதிர்பாருங்கள்' எனக் கூறினார். பின்னர் பயணிகள் வந்தபோது அவர்களிடம் இது பற்றிக் கேட்டனர். அதற்கவர்கள் 'ஆம்! நாங்களும் அதைக் கண்டோம்' எனக் கூறினர். ஆயினும் குரைஷிகள் இதன் பின்னரும் நிராகரிப்பிலேயே பிடிவாதமாக இருந்தனர்.